**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

Calendar )
)
Miscellaneous )
) **Case No. CC.75/2022**
Preliminary Register )
)
Sessions )

Prosecution pw-20
Deposition of witness for Defence
Court

Name : திரு. கே.செல்வராஜ் (மோட்டார் வாகன ஆய்வாளர்)

Father's Name :

Village :

Taluk :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2025

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக வட்டார போக்குவரத்து அலுவலகம் விருதுநகரில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.08.2022 ம் தேதி நான் பணியில் இருந்தபோது ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் இருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட கனரக சரக்கு வாகனம் TN 75 AT 7535 வாகனத்தினை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வில் வாகனத்திற்கு கீழ்கண்ட சேதாரங்கள் ஏற்பட்டன.

1) முன் வலது பக்க பாடியில் சேதம் காணப்பட்டது.

2) முன்பக்க காற்று தடை கண்ணாடி உடைந்து இருந்தது.

3) முன் வலது புற முகப்பு விலக்கு சேதமடைந்திருந்தது.

4) முன் வலது புற வீல்ஆர்ச் பாடி சேதமடைந்திருந்தது.

5) முன் பக்க பம்பரின் வலப்புறம் சேதமடைந்திருந்தது.

6) ஓட்டுனரின் கதவு சேதமடைந்திருந்தது.

வாகனத்தின் கைத்தடை திறன், கால்தடை திறன் நல்லநிலமையில் இருந்தது. விபத்தானது வாகனத்தின் இயந்திர கோளாறினால் ஏற்பட வாய்ப்பில்லை என்று மோட்டார் வாகன சான்று வழங்கினேன். **TN 75 AT 7535 பதிவெண் கொண்ட கனரக சரக்கு வாகனம் மோட்டார் வாகன ஆய்வுஅறிக்கை அ.சா.ஆ. 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் இதே வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 76 W 3382 என்ற பதிவெண் கொண்ட இலகுரக சரக்கு வாகனத்தினை 22.08.2022 ம் தேதி அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வில் கீழ்கண்ட சேதாரங்கள் காணப்பட்டன.

1) வலதுபுற பாடியில் Full length பாடியில் சேதமடைந்திருந்தது.

2) முன்பக்க காற்று தடை கண்ணாடி உடைந்திருந்தது.

3) Dash board சேதமடைந்திருந்தது.

4) Rear Body structure வலப்புறம் முழுவதுமாக சேதமடைந்திருந்தது.

5) முன் இடது பக்க டோர் பாடி சேதமடைந்திருந்தது.

6) இன்ஜின் இயங்காத நிலையில் இருந்தது.

வாகனத்தினை இயக்கி பார்க்க முடியாத நிலையில் இருந்தது. விபத்தானது வாகனத்தின் இயந்திர கோளாறினால் ஏற்பட வாய்ப்பில்லை என்று மோட்டார் வாகன சான்று வழங்கினேன். **TN 76 W 3382 என்ற பதிவெண் கொண்ட இலகுரக சரக்கு வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு சான்றிதழ் அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TATA ACE 11 நாட்கள் காலதாமதமாகவும், மற்றொரு வாகனமான டிப்பர் லாரி 14 நாட்கள் காலதாமதமாகவும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த வாகனங்கள் சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்து வழக்கு வாகனங்களை சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு செய்தால் தான் டயர் மார்க் மற்றும் எந்த வாகனத்தினால் விபத்து ஏற்பட்டது என்பது குறித்து கூற இயலும் என்றால் ஓரளவிற்கு கணித்து கூறலாம்.

2) TN 76 W 3382 பதிவெண் கொண்ட TATA ACE வாகனம் ஆட்கள் ஏற்றிக்கொள்ள தடை செய்யப்பட்ட வாகனம் என்றால் சரிதான். TATA ACE வாகனத்தில் ஆட்களை ஏற்றி பயணம் மேற்கொண்டால் அந்த வாகனத்தின் ஓட்டுனர் தான் சட்டத்தினை மீறி செயல்பட்டதாக சொல்லலாம் என்றால் சரிதான்.